செ.வெ.எண் :35 நாள் : 20.11.2019

# பத்திரிக்கை செய்தி

## ஈரோடு மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சர்க்கரை குடும்ப அட்டைகளை அரிசி விருப்ப குடும்ப அட்டைகளாக மாற்றம் செய்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் திரு.சி.கதிரவன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர் அரிசி பெறக்கூடிய குடும்ப அட்டைகளாக மாற்றம் செய்தல் தொடர்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 19.11.2019 அன்று சர்க்கரை குடும்ப அட்டைகளை அரிசி விருப்ப குடும்ப அட்டைகளாக மாற்றம் செய்திட உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

அதனடிப்படையில், சர்க்கரை குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் குடும்ப அட்டைகளை அரிசி விருப்ப குடும்ப அட்டைகளாக மாற்றம் செய்ய விரும்பினால் அதற்கான விண்ணப்பங்களை **26.11.2019-க்குள்** www.tnpds.gov.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பித்துக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ஈரோடு மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் சர்க்கரை பெறும் குடும்ப அட்டையிலிருந்து அரிசி பெறும் குடும்ப அட்டையாக மாற்றம் செய்ய வட்ட அளவில் அனைத்து வட்டங்களிலும், இணையதளம் மற்றும் நேரடியாக விண்ணப்பங்களை அளிக்கலாம் எனவும், அந்த விண்ணப்பங்கள் தகுதியின் அடிப்படையில் வகை மாற்றம் செய்யப்படும் எனவும் **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.கதிரவன், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு.**